தூத்துக்குடி மாவட்டம், ஏரலில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்துகொண்டு ரூபாய் 5.29 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 12 சுகாதார நிலையக் கட்டிடங்களை பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, அஸ்வினி Fisheries தனியார் நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதியில் இருந்து ரூபாய் 2.54 கோடி மதிப்பீட்டில் ஏரல் அரசு சமுதாய நல மையத்தில் பிரசவ அறை மற்றும் நவீன அறுவை சிகிச்சை அரங்கம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டி, கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்துப் பொருட்கள் ஆகியவற்றை பயனாளிகளுக்கு வழங்கினார் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. உடன் அமைச்சர் பெருமக்கள் மா.சுப்பிரமணியன், அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், பெ. கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா, ஊர்வசி அமிர்தராஜ், மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, கூடுதல் ஆட்சியர் திருமிகு.ஐஸ்வர்யா, வர்த்தக அணி இணைச்செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், ஸ்ரீவை கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.ஆர்.கோட்டாளம், ஏரல் கவுன்சிலர் ஆர்.பி.எஸ்.ஆனந்த், மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

தேனிதெற்கு மாவட்ட இளைஞரணி சார்பாக இந்தித் திணிப்பு நிதிப் பகிர்வில் பாரபட்சம் தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம்தேனி தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம் தலைமையில் சின்னமனூர் ஓடைப்பட்டி காந்தி சிலை அருகில் நடைபெற்றது. தேனி தெற்கு மாவட்ட கழக செயலாளர் கம்பம் இராமகிருஷ்ணன் எம் எல் ஏ.தேர்தல் பணிக்குழு செயலாளர் கம்பம் செல்வேந்திரன் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜி.பி.இராஜா, கவிஞர் இராஜகம்பீரன்அப்பாஸ். ஊடகவியலாளர். சிந்துஜா. ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள் இந்த நிகழ்ச்சியில் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சுகுமாரன். பிரபாகரன். அபுதாஹிர்.ராமகிருஷ்ணன். முருகன். ஸ்டீபன் ராஜ். மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழகத்தின் முன்னணி நிர்வாகிகள் பொது மக்கள் சார்பு அணியினர் கலந்து கொண்டனர்.

சிவகங்கை புத்தகத் திருவிழா நிறைவு நாள்:

மனிதனின் விலங்கு குணத்தை கல்விதான் மாற்றுகிறது!

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பேச்சு!

சிவகங்கை, மார்ச் 6-

தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின்படி மாவட்டம் தோறும் புத்தக கண்காட்சி திருவிழா திருவிழா நடைபெற்று வருகிறது.அதன்படி சிவகங்கை மாவட்ட நிர்வாகம், பள்ளிக்கல்வித்துறை, பொது நூலக இயக்கம், மற்றும் பப்பாசி இணைந்து நடத்தும் இந்தாண்டு நான்காவது ஆண்டு புத்தக கண்காட்சி கடந்த 21ஆம் தேதி சிவகங்கை மன்னர் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் துவங்கியது.

இந்த புத்தக கண்காட்சியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் .பெரியகருப்பன் தொடங்கி வைத்தார் .பத்து நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற புத்தகத் திருவிழா நேற்று முன்தினம் நிறைவு நாள் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்ற நிறைவு விழாவில் கலந்துகொண்டு தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அறிவின் பாதையில் அன்பின் ஒளி என்ற தலைப்பில் பேசியதாவது:-

உலகில் மனிதர்களாகிய நாம் எங்கே போகிறோம் என்று சிந்திக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. மனிதன் கருத்துக்களினாலும் அறிவினாலும் சிந்தித்து நடப்பவன். அறிவு என்பது நம்மை இணைத்து பார்ப்பதாகும். பகுத்தறிவு என்பது நாம் அறிவை பகுத்து அறிந்து அதற்கேற்ப செயல்படுவது தான் பகுத்தறிவாகும். அன்பின் முகவரி என்பது நம் எல்லைகளை கடந்ததாகும். அன்பை என்றும் பூட்ட முடியாது .

நமது பிள்ளைகள் நல்லோர் என்ற பட்டத்தை பெறுவதற்கு பெற்றோர்கள் ஏற்படுத்தி தர வேண்டும். பிறருக்கு கொடுத்து வாழ்வதுதான் வாழ்க்கையாகும். நட்பு என்பது நண்பன் மறைந்த பிறகும் அவன் செய்ய நினைத்ததை செய்து முடிப்பதுதான் உண்மையான நட்பாகும். உண்மையான நண்பர்கள் அன்பின் பாதையில் அறிவொளி ஏற்றுவது என்பது உண்மையான நட்பாகும் .

இன்றைய மாணவர்கள் விடாமுயற்சியினை ஏற்க வேண்டும். எந்த ஒரு காரியத்தையும் செய்ய நினைத்ததை விடா முயற்சி மூலமாக நிறைவேற்ற முடியும். தொடர்ந்து நன்றாக படித்து வெற்றி பெற வேண்டும் . விடாமுயற்சி வெற்றிக்கு வழி வகுப்பதாகும். நம்மை புத்தகங்கள் தான் புரட்டிப் போடுகிறது .

பகத்சிங், பேரறிஞர் அண்ணா மற்றும் பல்வேறு தலைவர்கள் தங்களது இறுதிநாள் வரை புத்தகங்கள் படித்து வந்தார்கள். புத்தகங்களை வாசிப்பவர்கள் தெளிவான முடிவினை எடுக்க முடியும். புத்த கங்களை வாசிப்பதால் முழு மனிதராக மாற முடியும். நாம் உயர் பதவி பட்டங்கள் மட்டும் பெறுவதால் முழுமைபெற்றதாக அர்த்தம் இல்லை. மனிதனாக மாற வேண்டும் .நமது விலங்கு குணத்தை கல்வி கற்பதால் நம்மை மாற்றுகிறது. அறிவையும் அன்பையும் பிரிக்க முடியாது.

இன்று உலகம் முழுவதும் பல்வேறு இடங்களில் போர் ஏற்பட்டுள்ளது. போரற்ற அமைதியான அன்பு செலுத்தும் உலகம் ஏற்பட வேண்டும் .அனைவரிடமும் அன்பு செலுத்தும் நிலை ஏற்பட வேண்டும் . அகில உலகில் அன்பு ஏற்பட வேண்டும். அதற்கு இத்தகைய புத்தக கண்காட்சிகள் அறிவின் பாதையில் அன்புஒளி அமைந்திட வழி அமையவேண்டும் . இத்தகைய புத்தக திருவிழாக்கள் நமக்கு உதவும். அனைவரும் புத்தகத் திருவிழாவில் கலந்துகொண்டு புத்தகத்தை வாசித்திட வேண்டும். புத்தகத்தினை படிப்பதன் மூலம் பல்வேறு வரலாறுகள், அறிவியல் ,சரித்திர சான்றுகள், நாகரிகம் மற்றும் பொது விஷயங்களை தெரிந்துகொள்ள முடியும்.

இவ்வாறு தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பேசினார். முன்னதாக இந்த நிகழ்ச்சியில் நகைச்சுவை நா வரசு சண்முக திருக்குமரன் நலம்,நலம் அறிய ஆவல் என்ற தலைப்பிலும், செல்வி பூஜிதா அன்பெனும் பிடிக்குள் அகப்படும் மலையே என்ற தலைப்பிலும், சிறப்புரை ஆற்றினார்கள். தென்னிந்திய புத்தகம் விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்க செயலாளர் எஸ். கே .முருகன் விழா ஏற்புரை நிகழ்த்தினார் . முன்னதாக மாநில ஊரக வாழ்வாதார திட்ட இயக்குனர் திருமதி கவித பிரியா வரவேற்றுப் பேசினார் .உதவி திட்ட அலுவலர் எஸ். ராஜ் மோகன் நன்றி கூறினார் பத்து நாட்கள் நடைபெற்ற புத்தகத் திருவிழா நேற்று முன்தினம் மூன்றாம் தேதி முடிவடைந்தது. இந்த புத்தகத் திருவிழாவில் 90க்கும் மேற்பட்ட அரங்கங்கள்,பத்துக்கும் மேற்பட்ட அறிவியல் மற்றும் சமூக கண்காட்சிகள் இடம் பெற்றிருந்தது. மாவட்டம் முழுவதும் இருந்து ஏராளமான பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள், பொதுமக்கள் பார்வையிட்டு சென்றார்கள். திராவிட கழகத்தின் சார்பில் வழக்கறிஞர் ச.இன்பநாதன், புகழேந்தி ஆகியோர் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரிடம் பெரியார் எழுதிய புத்தகங்களை வழங்கினார்கள்.

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மேலகரம் பேரூர் செயலாளர் சுடலை ஏற்பாட்டில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி 150 மாணவ, மாணவிகள் மற்றும் பேரூராட்சி மன்ற அலுவலகப் பணியாளர்கள்,தூய்மை பணியாளர்கள்,கழக நிர்வாகிகள் உள்பட 100 நபர்களுக்கு இனிப்பு மற்றும் மதிய உணவு வழங்கும் நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் பங்கேற்று வழங்கினார்.நிகழ்வில் பேரூராட்சி தலைவர் வேணி வீரபண்டியன்,துணை தலைவர் ஜீவானந்தம், ஒன்றிய செயலாளர் அழகு சுந்தரம்,அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜா,ரமேஷ் மற்றும் முத்தையா,பொன் செல்வன், வீரபாண்டியன், ஸ்ரீதர், சுந்தர் ராஜன், ஈஸ்வரன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 2 ம் தேதி பிறந்த 12 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் நிகழ்வு மாவட்ட விவசாய அணி தலைவர் நடராஜன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. பங்கேற்று தங்க மோதிரத்தை அணிவித்தார். உடன் மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ், மருத்துவ கல்லூரி முதல்வர் ரேவதி பாலன், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்தியானந்த், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகேஸ்வரி, பகுதி செயலாளர் அண்டன் செல்லதுரை,துபாய் சாகுல், ஒன்றியக்குழு தலைவர் ஸ்ரீலேகா அன்பழகன்,ஒன்றிய செயலாளர் அன்பழகன், வல்லநாடு முத்து உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

பெண் இனத்தை முன்னேற்றும் வகையில்

பெண்களுக்கான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தியவர் கலைஞர்!

சின்னாளப்பட்டியில் அமைச்சர் ஐ. பெரியசாமி பேச்சு!

சின்னளாபட்டி, மார்ச் 6-

பெண் இனத்தை முன்னேற்றும் வகையில் அனைத்து நலத்திட்டங்களையும் பெண்கள் பெயரில் தொடங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் என்று சின்னாளபட்டி விஜய் மஹாலில் 200 கர்ப்பிணி பெண்களுக்கு நடைபெற்ற சமுதாய வளைகாப்பு மற்றும் ஆத்தூர், ரெட்டியார்சத்திரம், நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, திண்டுக்கல் ஒன்றியங்களை சேர்ந்த 277 பெண்களுக்கு ரூ.2 கோடியே 77லட்சத்து7ஆயிரத்து666 மதிப்பிலான தாலிக்கு தங்கம் மற்றும் திருமண உதவித்தொகை வழங்கும் விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டி விஜய் மஹாலில் ஆத்தூர் தொகுதியை சேர்ந்த 200 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு மற்றும் ஆத்தூர், ரெட்டியார்சத்திரம், நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, திண்டுக்கல் ஒன்றியங்களை சேர்ந்த 277 பெண்களுக்கு ரூ.2 கோடியே 77லட்சத்து7ஆயிரத்து666 மதிப்பிலான தாலிக்கு தங்கம் மற்றும் திருமண உதவித்தொகை வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமை தாங்கினார். தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் நடராஜன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர் பாறைப்பட்டி ராமன், பிள்ளை யார்நத்தம் முருகேசன், முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர்

பாஸ்கரன், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரிமுருகேசன், பேரூராட்சி மன்றத்தலைவர் பிரதீ பாகனகராஜ், துணைத்தலைவர் ஆனந்திபாரதிராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட சமூக நல அலுவலர் புஷ்பா வரவேற்று பேசினார். விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தி.மு.க. மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி பேசும் போது, இங்கு வந்திருக்கும் தாய்மார்கள் அனைவரும் சுகமான முறையில் பிரசவம் பார்த்து நல்ல முறையில் குழந்தைகளை வளர்க்க வேண்டும் என்ற நோக்கோடுதான் இந்த சமுதாய வளைகாப்ப நடத்தப்படுகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெண் இனத்தை போற்றும் வகையில் அவர் செயல்படுத்திய அனைத்து நலத்திட்டங்களும் பெண்கள் பெயரிலதான் அமைந்தன. மூவலூர் இராமாமிர்தம் அம்மையா நினைவு திருமண உதவித் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி மகப்பேறு உதவித்தொகை, ஈ.வே.ரா மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண உதவித் திட்டம் போன்ற திட்டங்களை செயல்படுத்தியதால் கிராமப்புற பெண்கள் மேன்மை அடைந்தனர். திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் மகளிர் உரிமைத்தொகை, பள்ளி மற்றும் கல்லூரியில் படிக்கும் பெண்களுக்கு மாதாந்திர உதவித்தொகை போன்றவற்றை பெண்கள் பெயரிலேயே அவர்கள் பெருமைப்படும் வகையில் அமைத்தவர் நமது தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்றார். இன்று உங்களுக்கு வளைகாப்பு குழந்தை பிறந்த பின்பு நீங்கள் குடும்பத் தலைவி. உடனடியாக நீங்கள் மகளிர் உரிமைத்தொகைக்கு மனு செய்து மாதாமாதம் உரிமைத் தொகை பெறலாம். தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அவர் கொடுத்த திருமண உதவித்தொகைதான் கிராமங்களில் உள்ள அடித்தட்டு மக்களின் திருமணத்திற்கு உதவியாக இருந்தது. இதை யாரும் மறுக்க முடியாது. கலைஞர் ஆட்சிக்காலத்தில் பணக்காரர்கள் தான் பொங்கல் பண்டிகை கொண்டாட முடியும் என்ற நிலை மாறி ஏழை பாமரனும் பொங்கல் பண்டிகை கொண்டாட விலையில்லா கரும்பு பச்சரிசி, வெல்லம், முந்திரிப்பருப்பு உட்பட அனைத்து பொருட்களையும் வழங்கினார். இப்போது தமிழக அரசு வேஷ்டியும், சேலையும் வழங்கி வருகிறது. இதை நான் எதற்கு சொல்கிறேன் என்றால் அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் ஆட்சியாக தி.மு.க. அரசு உள்ளது என்றதோடு படிக்கும் குழந்தை பட்டினியுடன் செல்லக்கூடாது என்பதற்காக காலை உணவுத் திட்டத்தை தொடங்கி இன்று உலகமே இத்திட்டத்தை போற்றுகிறது. இதற்கு காரணம் மு.க.ஸ்டாலின் ஒருவரே என்றார். இப்போது வேலை வாய்ப்பிலும் பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு 45 சதவிகிதத்திற்கு மேல் அரசு வேலை வாய்ப்பை பெற போகிறீர்கள் என்றார். அப்போது பெண்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரம் செய்தனர். நிகழ்ச்சியில் திண்டுக்கல் மாநகராட்சி மேயர் இளமதிஜோதிபிரகாஷ், ஆத்தூர் வட்டாட்சியர் முத்து முருகன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தட்சிணாமூர்த்தி, அருள்கலாவதி, சின்னாளபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் இளவரசி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் மணி, மாவட்ட தகவல் தொழில் நுட்ப துணை அமைப்பாளர் வாஞ்சிநாதன், முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் சுப்புலெட்சுமிசண்முகம், பேரூர் கழக செயலாளர்கள் சின்னாளபட்டி மோகன் ராஜ், சித்தையன்கோட்டை சக்திவேல், அய்யம்பாளையம் தங்கராஜ், சின்னாளபட்டி பேரூர் கழக முன்னாள் செயலாளர்கள் பாலகிருஷ்ணன், அறிவழகன், பொருளாளர் எஸ்.ஆர்.முருகன், அகரம் பேரூராட்சி மன்றத் தலைவர் நந்தகோபால், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் காணிக்கைசாமி, செல்விகாங்கேயன், சிந்தாமணி நாகசுந்தரம், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் நெல்லூர் மலைச்சாமி, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய அவைத்தலைவர் சிவக்குமார், துணைச் செயலாளர்கள் ராஜேந்திரன், வசந்தாகென்னடி, எம்சிபாண்டியன், பொருளாளர் தொப்பம்பட்டி கருப்பையா, மேற்கு ஒன்றிய அவைத்தலைவர் காணிக்கைசாமி, துணைச் செயலாளர்கள் மல்லையாபுரம் சக்திவேல், கலாபச்சை, கருத்தராஜா,பொருளாளர் தேவரப்பன்பட்டி போஸ், மாவட்ட இலக்கிய அணியைச் சோந்;தபாறைப்பட்டி முருகன், ஒன்றிய இளைஞரணியைச் சேர்ந்த காங்கேயன், முன்னாள் ஊராட்சி மன்றத்தவைர்கள் உலகநாதன், நாகலெட்சுமிசதீஷ்குமார், முன்னாள் ஊராட்சி மன்றத்;தலைவர்கள் புதுச்சத்திரம் மொர்சி, செட்டியபட்டி ராஜா, ஒன்றிய மாணவரணி அமைப்பாளர்கள் அரவிந்தன், ரெட்டியார்சத்திரம் செல்வம், மற்றும் பாறைப்பட்டியைச் சேர்ந்த மாயப்பன், டாஸ்மாக் வடிவேலு உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

தேனி வடக்கு மாவட்டம் தென்கரை பேரூராட்சிஅலுவலகத்தில் புதிய கூட்டரங்குவடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன்எம்.பி. அடிக்கல் நாட்டி துடைக்கி வைத்தார். உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ. தென்கரை பேரூராட்சி தலைவர் நாகரா.ஜ் தாமரைக் குளம் பேரூராட்சி தலைவர் பால்பாண்டிமற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.